**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள் வியாழன்கிழமை**

**I.A.03/2025 in OS.188/2018**

ஜெயபாலன், .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பிச்சைமுத்து,
2. மாயவன், ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 17.09.2025 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M. சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது கடந்த 03.08.2024 ம் தேதி மனுதாரர் தரப்பு விசாரணையை முடிக்கப்பட்டதை Re-open செய்தும், மனுதாரர் தரப்பில் கடந்த 18.08.2015 ம் தேதிய ஆவணத்தை குறியீடு செய்ய உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம்:-**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தொடர்ந்துள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2 ம் எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிக்காக தாவா நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் கடந்த 18.08.2015 ம் தேதி மனுதாரரின் அண்ணன் மருதுமுத்துவிற்கு, மனுதாரரின் தந்தை எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தினை மனுதாரர் தரப்பு சான்றாவணமாக தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும், மேற்படி ஆவணம் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்க மிகவும் முக்கியமாக ஆவணமாகும் என்றும், எனவே கடந்த 03.08.2024ம் தேதி மனுதாரர் தரப்பு விசாரணையை முடிக்கப்பட்டதை Re-open செய்தும், மனுதாரர் தரப்பில் கடந்த 18.08.2015ம் தேதிய ஆவணத்தை குறியீடு செய்ய உத்தரவாக வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதை 1ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்**</u>

3. மனுதாரரின் மனு சரியல்ல என்றும், மனுதாரர் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்படடுள்ளனர் என்றும், அவர்கள் இருவரையும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றும், அதன்பிறகு மனுதாரர் தரப்பில் சாட்சியம் இல்லை என்று குறிப்பு எழுதிக்கொடுக்கப்பட்ட பிறகே மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி விசாரித்து குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 18.08.2015 ஆம் தேதி மனுதாரரின் தந்தை மருதமுத்துக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டும் என மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிக்கபட்டதை மறுதிறப்பு செய்து சாட்சியத்தை மீண்டும் அழைக்க மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ள தக்கது இல்லை என்றும், வழக்கு நடைமுறையை காலதாமதம் செய்ய வேண்டி இம்மனு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் கடந்த 10.02.2020 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு 07.07.2023 அன்று விசாரணை பட்டியலுக்கு மாற்றப்பட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா கடந்த 21.07.2023 இருந்த நிலையில் மேலும் பிரதிவாதிகள் மனுவில் கண்ட திருத்தங்களை அசல் எதிர்கோருரிமையில் சேர்க்கவேண்டி தாக்கல் செய்த I.A.1/2023 மனு அனுமதிக்கபட்ட நிலையில் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக மேற்படி வாய்தா 26.04.2024 ற்கு மாற்றப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு 28.06.2024 வாய்தா வாதி தரப்பு இதர சாட்சிக்காக மேற்படி வாய்தா மாற்றப்பட்டு 03.08.2024 அன்று வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, தற்போது பிரதிவாதி தரப்பு இதர சாட்சியத்திற்காக வாய்தா உள்ள நிலையில் தற்போது வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதை பார்க்கையில் அவர் அசல் வழக்கில் கலந்துகொண்டு வழக்கை மேல்நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது

என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றும், மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுவினை அனுமதிக்கப்பட வேண்டியது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி அதன்படியே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. எனவே முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1,000/–யை வரும் **27.11.2025**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**28.11.2025**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.11.20 18:28:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:

– இல்லை –

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.11.20 18:28:32 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.